## இயல் 1 - விருந்தோம்பல்

**பாடம்: தமிழ்**

**வகுப்பு : 7**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மரம் வளர்த்தால் ................................. பெறலாம்.

அ) மாறி **ஆ) மாரி** இ) காரி ஈ) பாரி

2. 'நீருலையில் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்

**இ) நீர் + உலையில்** ஈ) நீரு + இலையில்

3.மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............

**அ) மாரியொன்று** ஆ) மாரி ஒன்று இ) மாரியின்று ஈ) மாரியன்று

### ஆ. குறுவினா

**1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**

அங்கவை, சங்கவை என்போர் பாரியின் மகள்களாவர்.

**2. பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை ' - எவ்வாறு?**

பாரி மகளிர் உலை நீரில் பொன் இட்டுத் தந்ததால் பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை என்பது புலனாகிறது.

### இ. சிந்தனை வினா

**1. தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.**

தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகள்: (பண்பாடு - நம்மைப் பண்படுத்துதல்)

(i) ஒழுக்கம்
(ii) சிறந்த கல்வியைப் பெறுதல்
(iii) பெரியோரை மதித்தல்
(iv) நன்றியுணர்வுடன் இருத்தல்
(v) ஈகைக் குணம்
(vi) விருந்தோம்பல்
(vii) முன்னோர் கூறியவற்றைப் பின்பற்றுதல்
(viii) மேலைநாட்டு உணவைத் தவிர்த்து நம் பாரம்பரிய உணவை உண்ணுதல்.
(ix) உடலை மறைக்கும் ஆடை அணிதல்.
(x) உறவினர்களைப் பேணி பாதுகாத்தல்
(xi) நாட்டுப்பற்றுடனும், மொழிப்பற்றுடனும் இருத்தல்.

## கவிதைப் பேழை - வயலும் வாழ்வும்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உழவர் சேற்று வயலில் ......................... நடுவர்.

அ) செடி ஆ) பயிர் இ) மரம் **ஈ) நாற்று**

2. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ...................... செய்வர்.

**அ) அறுவடை** ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை

3. தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........

அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து + தெடுத்து

இ) தேர்ந்தது + அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து

4. ஓடை + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............

அ) ஓடை எல்லாம் ஆ) ஓடையெல்லாம்

இ) ஓட்டையெல்லாம் ஈ) ஓடெல்லாம்

## ஆ. பொருத்துக.

1. நாற்று - நடுதல்
2. நீர் - பாய்ச்சுதல்
3. கதிர் - அறுத்தல்
4. களை - பறித்தல்

## இ. வயலும் வாழ்வும் பாடலில் உள்ள மோனை, எதுகைச் சொற்களை எழுதுக.

| மோனைச்சொற்கள் | எதுகைச்சொற்கள் |
|---|---|
| ஓடை - ஒண்ணரைக் குழி | சேத்து - நாத்து |
| மடமடன்னு- மண்குளிர் | சாலு - நாலு |

## ஈ. பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.

எ.கா. : போயி - போய்

| பேச்சு வழக்குச் சொற்கள் | எழுத்து வழக்குச் சொற்கள் |
|---|---|
| பிடிக்கிறாங்க | பிடிக்கின்றனர் |
| வளருது | வளர்கின்றது |
| இறங்குறாங்க | இறங்குகின்றனர் |
| வாரான் | வருகின்றான் |

## உ. குறுவினா

1. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?

உழவர்கள், நாற்றுப் பறிக்கும் பொழுது அங்குள்ள நண்டுகளையும் சேர்த்துப் பிடித்தனர். கதிரடித்த நெல்தாள்களை மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகளைப் பிரித்தெடுத்தனர்.

2. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?

அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர். நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து பிரித்தெடுப்பர்.

## ஊ. சிறுவினா

1. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

உழவுத்தொழிலின் நிகழ்வுகள் :

KOSAVAMPATTI ... KNOWLEDGE IS POWER

- மாடுகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுது பண்படுத்துவர்.
- நாற்றங்காலில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட நாற்றை நடுவர். அவ்வாறு நடும்போது ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் என்று பெண்கள் நாற்றை நடுவர்.
- பயிருக்குத் தேவையான அளவு நீரைப் பாய்ச்சுவர்.
- பிறகு பயிர்களுக்கு இடையே வளர்ந்துள்ள களைகளைப் பறிப்பர்.
- பயிர்களுக்குத் தேவைக்கேற்ப பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளிப்பர். இயற்கை உரங்களையும் பயன்படுத்துவர்.
- நெற்பயிர் வளர்ந்து நெல் முற்றியதும் அறுவடை செய்வர்.
- அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டி நெற்களத்தில் சேர்ப்பர்.
- கதிரடித்து நெல்மணியைப் பிரித்து எடுப்பர். எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர்.
- பிறகு நெல்மணிகளை வெயிலில் காயவைத்து மூட்டைகளாகக் கட்டி வீட்டில் கொண்டு வந்து சேர்ப்பர்.

## எ. சிந்தனை வினா

**1. உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி எழுதுக.**

**உழவுத்தொழிலில் காலந்தோறும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் :**

(i) பண்டைத் தமிழர்கள் வேளாண்மைத் தொழிலை மிகச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

(ii) குறிஞ்சி நில மக்கள் ஏர்கொண்டு உழாமல் வேளாண்மை செய்துள்ளனர்.

(iii) முல்லை நில மக்கள்தான் கலப்பையின் உதவியோடு பயிர் செய்துள்ளனர்.

(iv) ஆறு, குளம், ஏரி முதலிய நீர் நிலைகளில் இருந்து உழவர்கள் வயலுக்கு நீர் பாய்ச்சினர். பயிர் செய்தனர். வரகு, சாமை, நெல் எனப் பயிர் செய்தனர் தமிழர். அரிசியை உலகிற்கெல்லாம் கொடுத்தனர்.

(v) அதேபோல பிற பகுதிகளில் இருந்து வேறு சில பயிர்களைத் தமிழகத்திற்குப் பண்டைத் தமிழர்கள் கொண்டு வந்துள்ளனர்.

(vi) வானியல் பற்றி அறிந்ததால் கோள்களின் நிலை கண்டு மழை வரும் காலமறிந்து பயிர் செய்தனர். இயற்கை உரங்களான இலைதழைகளைப் பயன்படுத்தினர். கால்நடைகளை வளர்த்து அதன் சாணங்களை எருவாக்கினர். கால்நடைகளை வண்டி இழுக்கவும் ஏர் உழவும் பயன்படுத்தினர்.

(vii) இந்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறியது அதிக விளைச்சல் வேண்டி செயற்கை உரங்களைப் பயன்படுத்தினர். பலவகையான பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தினர். இதனால் மண் வளம் பாதிப்புக்குள்ளாகி விட்டது. மனிதன் செய்த வேலைகளையெல்லாம் தற்பொழுது இயந்திரங்கள் செய்கின்றன.

(viii) உழவுக் கருவிகள், களைப்பறித்தல், அறுவடை செய்தல் என எல்லாவற்றிற்கும் நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. புதிய வகை வேளாண்மையின் விளைவாக மக்களுக்குப் புதிய நோய்கள் வந்தன. சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டது. இந்நிலையை மாற்ற வேண்டி தற்போது இயற்கை வேளாண்மை என்று கூறப்படும் அங்கக வேளாண்மைக்கு மாறியுள்ளனர் விவசாயிகள். இவ்வாறு உழவுத்தொழில் காலந்தோறும் மாற்றமடைந்து கொண்டே வந்துள்ளது.

## உரைநடை உலகம் - திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.திருநெல்வேலி ................ மன்னர்களோடு தொடர்பு உடையது.

அ) சேர ஆ) சோழ **இ) பாண்டிய** ஈ) பல்லவ

2. இளங்கோவடிகள் ......................... மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.

அ) இமய ஆ) கொல்லி **இ) பொதிகை** ஈ) விந்திய

3. திருநெல்வேலி ........... ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

அ) காவிரி ஆ) வைகை **இ) தென்பெண்ணை** ஈ) தாமிரபரணி

### ஆ. பொருத்துக.

1. தண்பொருநை - தாமிரபரணி
2. அக்கசாலை - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம்
3. கொற்கை - முத்துக் குளித்தல்
4. திரிகூடமலை - குற்றாலம்

### இ. குறுவினா

**1. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?**

தாமிரபரணி கிளை ஆறுகள் : பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி.

**2. கொற்கை முத்து பற்றிக் கூறுக.**

கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றதாகும். நற்றிணை, அகநானூறு முதலான சங்க இலக்கியங்கள் கொற்கை முத்தின் சிறப்பைக் கூறுகின்றன.

கிரேக்க, உரோமாபுரி நாடுகளைச் சேர்ந்த யவனர்கள் முத்துக்களை விரும்பி வாங்கிச்சென்றனர்.

### ஈ. சிறுவினா

**1. திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத்தொழில் குறித்து எழுதுக.**

(i) திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத் தொழில். தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்கு குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும்கூடப் பயன்பாட்டில் உள்ளன.

(ii) இரு பருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச் சிறுதானியங்கள், எண்ணெய்வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறுவகைகள் போன்றவை பயிரிடப்படுகின்றன.

(iii) இராதபுரம்,நாங்குநேரி, அம்பாசமுத்திரம்,தென்காசி போன்ற பகுதிகளில் பெருமளவில் வாழை பயிரிடப்படுகின்றது. இங்கு விளையும் வாழைத்தார்கள் தமிழ்நாடு மட்டுமின்றி கர்நாடகம் ,கேரளம் போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL
KOSAVAPATTI
KNOWLEDGE IS POWER

(iv) நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் நெல்லை மாவட்டமே முதலிடம் வகிக்கின்றது.

**3. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

**திருநெல்வேலியும், தமிழும் :**

(i) அகத்தியம் என்னும் முதல் தமிழ் இலக்கண நூலை எழுதியவர் அகத்தியர். இவர் திருநெல்வேலியிலுள்ள பொதிகை மலையில் வாழ்ந்தவர்.

(ii) சங்கப் புலவரான மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர் ஆகியோர் திருநெல்வேலிச் சீமையில் பிறந்து தமிழுக்குச் செழுமை சேர்ந்துள்ளனர்.

(iii) அயல்நாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றோரையும் தமிழின்பால் ஈர்த்த பெருமைக்கு உரியது திருநெல்வேலி.

**3. திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றிக் கூறுக.**

(i) பொருநை எனப்படும் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நெல்லை மாநகரின் அமைப்பு சிறப்பானது.

(ii) நகரின் நடுவே நெல்லையப்பர் திருக்கோவில் அமைந்துள்ளது. கோவிலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மாட வீதிகள், அவற்றைச் சுற்றித் தேரோடும் வீதிகள், அழகுற அமைந்துள்ளன.

(iii) அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் சிறை வைக்கப்பட்டதால் பெயர்பெற்ற காவற்புரைத் தெரு உள்ளது.

(iv) தானியங்களை விற்கும் வீதியான கூழைக்கடை (கூலம் - தானியம்), பொன் நாணயங்களை உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலை, பெரு வணிகம் நடைபெற்ற இடமான பேட்டை என்னும் ஊர் உள்ளது.

(v) இத்தகு சிறப்பு மிகுந்த நகர அமைப்புகளைக் கொண்டு காலத்தால் புகழ்பெற்று நிற்கிறது திருநெல்வேலி நகரம்.

KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

**உ. சிந்தனை வினா**

**1. மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

**மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் :**

(i) மக்கள் ஆண்டு முழுவதும் தண்ணீர் பஞ்சம் இன்றி வாழ உதவும் நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.

(ii) மழைநீர் வீணாகக் கடலில் சென்று கலக்காமல் ஆங்காங்கு குளங்கள் இருக்க வேண்டும்.

(iii) அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்திருக்க வேண்டும்.

(iv) மாணவர்கள் பள்ளிக்கு நீண்ட தூரம் செல்லாமல் மக்கள் தொகைக்கு ஏற்ப பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இருக்க வேண்டும்.

(v) கோவில்கள் மற்றும் நூலகம் இருக்க வேண்டும்.

(vi) ஆங்காங்கு பூங்காக்கள் அமைத்து மரம் செடிகளை வளர்க்க வேண்டும்.

குழந்தைகள் விளையாடுவதற்கும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உடற்பயிற்சிக்கும் நடைப் பயிற்சிக்கும் உதவும்படி அமைக்க வேண்டும்.

(vii) சிறந்த போக்குவரத்து வசதிக்குச் சாலைகள் நன்கு அமைக்க வேண்டும்.

(viii) சிறந்த மருத்துவமனைகள் இருக்க வேண்டும்.

(ix) சாலையோரங்களில் மரங்கள் வளர்க்க வேண்டும்.

(x) பலவகையான வணிகம் நடைபெற வேண்டும்.

(xi) மேற்கூறிய அனைத்தும் மக்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கும்.

## விரிவானம் - திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

**1. டி.கே.சி. குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

(i) கவிஞர்கள் தங்கள் கவித்திறத்தால் உலகையே ஆள்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்து திருநெல்வேலியைப் புகழ்பெறச் செய்துள்ளனர். அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

(ii) கடிகைமுத்துப் புலவர் இரு நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பாடல்கள் பாடியுள்ளார். முக்கூடல் பள்ளு' என்னும் சிற்றிலக்கியம் சீவலப்பேரி' என்கிற முக்கூடல் பற்றியதாகும்.

(iii) மதுரையிலிருந்து நெல்லைக்கு வந்தவர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர். இவர் நெல்லையில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்து உரிமையுடன் சுவாமியிடம் சிபாரிசு செய்ய வேண்டுகிறார்.

(iv) திருநெல்வேலிக்கு அருகில் உள்ள சீவைகுண்டத்துப் பெருமாளைப் போற்றிப் பாடியவர் பிள்ளைப் பெருமாள் ஆவர். ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் பிறந்த ஊரான ஆழ்வார் திருநகரில் உள்ளது. இதன் பழைய பெயர் திருக்குருகூர் .அவர் தமது ஈடுபாட்டைத் தமது திருவாய்மொழியில் பாடியுள்ளார்.

(v) கொற்கை நகர முத்து வணிகத்தைப் பற்றி முத்தொள்ளாயிர ஆசிரியர் அனுபவித்துப் பாடியுள்ளார். சீதக்காதி என்ற பெருவணிகர் காயல்பட்டணத்தைச் சார்ந்தவர். அவர் பல புலவர்களை ஆதரித்தவர்.

(vi) அவர் இறந்த போது நமச்சிவாயப் புலவர், "கோமன் அழகமர் மால் சீதக் காதி கொடைக்கரத்துச் சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே" என்று தம் உணர்ச்சியைப் பாடலாக்கினார்.

(vii) அருணகிரிநாதர் தாம் பாடிய திருப்புகழில் ஏரிநீர் நந்தவனங்களில் இருந்ததால் சேல்மீன்கள் துள்ளிக் குதித்தி பூஞ்செடிகொடிகளை அழித்தன எனப் பாடியுள்ளார்.

(viii) அண்ணாமலையார் கழுகுமலை முருகன் மேல் காவடிச் சிந்தைப் பாடியுள்ளார். சங்கரன் கோவிலில் உள்ள கோமதித் தாயைப் பற்றி அழகிய சொக்கநாதர் பக்தியோடு பாடியுள்ளார்.

(ix) கரிவலம் வந்த நல்லூர் என்னும் பெயர் கொண்ட ஸ்தலம் கருவை நல்லூர் ஆகும். இத்தலத்தைப் பற்றி திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி ஆகிய நூல்களில் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

குற்றால மலையின் இயற்கையைக் கண்ட திருஞான சம்பந்தர் நுண் துளி தூங்கும் குற்றாலம்' என்று பாடியுள்ளார். இத்தலத்தைப் பற்றி மாணிக்கவாசகரும் உற்றாரை யான் வேண்டேன் என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

(x) திரிகூடராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சியில் இம்மலையின் வளத்தைக் குறி சொல்லுகின்ற பெண் கூறுவது போல் பாடியுள்ளார்.

இத்தகு பெருமைமிக்க திருநெல்வேலியைப் பற்றியும் அங்கு வாழ்ந்த புலவர்களின் புலமையையும் நினைவில் கொள்வோம்.

## கற்கண்டு - அணி இலக்கணம்

### அ. குறுவினா

**1. உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக.**

ஒரு சொல்லை மற்றொரு சொல்லோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை அல்லது உவமானம் ஆகும். உவமையால் விளக்கப்படும் பொருள் உவமேயம் ஆகும். உவமை உவமேயம் இரண்டுக்கும் இடையில் வரும் உருபு உவம உருபு ஆகும்.

| எ.கா : | தேன் | போன்ற | மொழி |
|---|---|---|---|
| | உவமை | உவம உருபு | உவமேயம் |

**2. உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உவமை அணி | எடுத்துக்காட்டு உவமை அணி |
|---|---|
| ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணியாகும். | உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவம உருபு மறைந்து வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும். |

## மொழியை ஆள்வோம்

### அ. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

பனை மரமே பனை மரமே
ஏன் வளந்தே இத் தூரம்?
குடிக்கப் பதனியானேன்!
கொண்டு விற்க நுங்கானேன்! தூரத்து மக்களுக்குத்
தூதோலை நானானேன் !
அழுகிற பிள்ளைகட்குக்
கிலுகிலுப்பை நானானேன்!
கைதிரிக்கும் கயிறுமானேன் !
கன்று கட்டத் தும்புமானேன்! .......... ( நாட்டுப்புறப்பாடல் )

**1. பனை மரம் தரும் உணவுப்பொருள்கள் யாவை?**

பதனி, நுங்கு ஆகியவை பனை மரம் தரும் உணவுப் பொருள்களாகும்.

**2. பனை மரம் யாருக்குக் கிலுகிலுப்பைத் தரும்?**

பனை மரமானது, அழுகிற பிள்ளைக்குக் கிலுகிலுப்பையைத் தருகிறது.

3. தூதோலை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

தூதோலை = தூது + ஓலை.

4. பனைமரம் மூலம் நமக்குக் கிடைக்கும் பொருள்களைப் பட்டியலிடுக.

பதனி.நுங்கு,தூதோலை,கிலிகிலுப்பை,கயிறு,தும்பு முதலியன பனைமரம் மூலம் நமக்குக் கிடைக்கும் பொருள்கள் ஆகும்

5.பாடலுக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

பனை தரும் வரம்.

ஆ. பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## என்னைக் கவர்ந்த நூல்

**என்னைக் கவர்ந்த நூல் - திருக்குறள் :**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்குடி’ என்பது முன்னோர் வாக்கு. உலகின் மிகத் தொன்மையான தமிழ்மொழி பண்டைக் காலத்திலிருந்து தற்காலம் வரை நமக்கு பல நூல்களைத் தந்து கொண்டேயிருக்கிறது. ஆனாலும் இன்றளவும் உலக மக்களால் போற்றப்படும் உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**உலகப்பொதுமறை :**

அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை செம்மையுற நமக்குக் கூறும் திருக்குறள் குறிப்பிட்ட ஒரு நாட்டினருக்கோ , மொழியினருக்கோ மட்டும் உரித்தன்று. உலகம் முழுவதிற்கும் சொந்தமானது. உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறள் மூன்றாம் இடத்தில் உள்ளது. இதுவரை 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வெளிநாட்டினருக்கும் இங்கு வந்து தமிழ் கற்று திருக்குறளைப் படித்து, பின் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர்.

**அறங்கள் கூறும் திருக்குறள் :**

திருக்குறளில் மனிதனுக்குச் சொல்லாத அறங்களே கிடையாது. சாதாரண மனிதன் முதல் மன்னன் வரை அனைவருக்கும் கூறப்பட்டுள்ள கருத்துகள் பொதுவானவை; எந்தக் காலத்திற்கும் பொருந்தக் கூடியவை. திருவள்ளுவர் சாதாரணக் குடிமகனாக வாழ்ந்தவர்தான். ஆனால் அரசன், துறவி, குடும்பத்தலைவன் என்று அனைவருக்கும் வாழ்வியல் நெறிகளைக் கூறியுள்ளார். திருக்குறளைப் படிக்க படிக்க இன்பமும் பண்பும் வளரும்.

**முடிவுரை :**

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான் புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று பாரதி புகழ்ந்துள்ளார். ஏழே சீர்களில் உலக நீதியைச் சொல்லும் திருக்குறளே நான் இன்றும் என்றும் விரும்பும் நூலாகும்

## மொழியோடு விளையாடு

அ. குறுக்கெழுத்துப் புதிர்.

தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப் பெயர்களையும் அவற்றின் சிறப்பையும் அறிவோம்.

**இடமிருந்து வலம்:**

1. பின்னலாடை நகரம் **திருப்பூர்**
2. மலைகளின் அரசி **உதகை**
6. தமிழகத்தின் தலநகரம் **சென்னை**
13. நெற்களஞ்சியம் **தஞ்சாவூர்**

**வலமிருந்து இடம்**

3. மலைக்கோட்டை நகரம் **திருச்சி**
5. ஏழைகளின் ஊட்டி **ஏற்காடு**
8. மாங்கனித் திருவிழா **காரைக்கால்**
11. மஞ்சள் மாநகரம். **ஈரோடு**

**மேலிருந்து கீழ்**

1. பூட்டு நகரம் **திண்டுக்கல்**
3. தேர் அழகு நகரம் **திருவாரூர்**
4. தெற்கு எல்லை **கன்னியாகுமரி**
7. புலிகள் காப்பகம் **முண்டந்துறை**

**கீழிருந்து மேல்**

9. பட்டாசு நகரம் **சிவகாசி**
10. தூங்கா நகரம் **மதுரை**
12. மலைகளின் இளவரசி **கொடைக்கானல்**
14. கர்மவீரர் நகரம் **விருதுநகர்**

**ஆ. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக**

1. என் தாயார் என்னை **கண்ணை இமை காப்பது போல** காத்து வளர்த்தார்.
(கண்ணை இமை காப்பது போல/ தாயைக் கண்ட சேயைப் போல)
2. நானும் என் தோழியும் **நகமும் சதையும் போல** இணைந்து இருப்போம்.
(இஞ்சி தின்ற குரங்கு போல/ நகமும் சதையும் போல)
3. திருவள்ளுவரின் புகழை **உள்ளங்கை நெல்லிக்கனி போல** உலகமே அறிந்துள்ளது.
(எலியும் பூனையும் போல/ உள்ளங்கை நெல்லிக்கனி போல)
4. அப்துல் கலாமின் புகழ் **குன்றின் மேலிட்ட விளக்கு போல** உலகெங்கும் பரவியது.
(குன்றி மேலிட்ட விளக்கு போல/ குடத்துள் இட்ட விளக்கு போல)
5. சிறு வயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள். **பசுமரத்தாணி போல** என் மனத்தில் பதிந்தன. (கிணற்றுத்தவளை போல/ பசுமரத்தாணி போல)

**இ. கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக**

(எ.கா.) திருநெல்வேலி - திரு, நெல், வேலி, வேல்

1. நாகப்பட்டினம் - நாகம், பட்டினம், படி, பட்டி, கப்பம், நாடி, நா
2. கன்னியாகுமரி - கன்னி, குமரி, கனி, கரி, யா, கயா
3. செங்கல்பட்டு - செங்கல், பட்டு, படு, செல், பல், கல், பகல், பகட்டு
4. உதகமண்டலம் - மண், மண்டலம், மடம், உண், கண், தடம், கமண்டலம், கடம்
5. பட்டுக்கோட்டை - பட்டு, கோட்டை, கோடை, படை, பட்டை, கோ, கோடு.